**கவனிக்க.**- *2009.06.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1607 - 2009 ජූනි 19 වැනි සිකුරාදා - 2009.06.19**

*1607 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 724 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 727 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வரராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில்˙ பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2009, யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூன் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு

பிரதிப் பணிப்பாளர் (இயற்கை வளங்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

இலங்கை விஞ்ஞான சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தர பிரதிப் பணிப்பாளர் (இயற்கை வளங்கள்) பதவிக்கு தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்ப தாரரும் பின்வரும் தகைமைகளைக் கொண்டவராயிருத்தல் வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒரு துறையில் விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். சமுத்திரச் சுற்றாடவியல், விவசாய விஞ்ஞானம், சுற்றாடலியல், விலங்கியல், புவிச்சரிதவியல், தாவரவியல், வனவியல், உயிரியல், இரசாயனவியல், கரையோரப் பாதுகாப்பு ;
அத்துடன்

(ii) இதற்கு மேலதிகமாக மேற்படி ஒரு துறையில் அல்லது இயற்கை வளத் துறையுடன் தொடர்புடைய ஒரு துறையில் பட்டப்பின் படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;
அத்துடன்

(iii) இலங்கை விஞ்ஞான சேவையின் II/II தரத்திற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து 10 வருட சேவைக்கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;
அத்துடன்

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான அண்மிய ஐந்து ஆண்டுகளில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். (திருப்திகரமான சேவைக்காலம் என்பதன் மூலம், குறித்த காலத்தினுள் அனைத்துச் சம்பள அதிகரிப்புகளையும் பெற்றிருக்கின்றதும் மேற்படி காலத்தினுள் செய்துள்ள தவறொன்று தொடர்பில் எச்சரிக்கை செய்யப்படுவதைத் தவிர ஏனைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றையும் பெற்றிராததுமான ஒரு சேவைக் காலமாக கருதப்படுகின்றது.)

2. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன் எஸ். எல். 1-2006 இன் பிரகாரம் ரூபா 22,935 – 10 x 645 – 8 x 790 – 17 x 1,050- ரூபா 53,555 (III, II, I தரங்களுக்கு ஏற்புடையது.)

பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு ரூபா 30,175 தொடக்கம் ரூபா 35,705 வரையிலான சம்பள அளவுகள் ஏற்புடையதாகும்.

3. **வயது**.- 2009.06.19 ஆந் திகதிக்கு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

4. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- மேற்படி தகைமைகளைக் கொண்ட இலங்கை விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் நடத்தப்படுகின்ற உள்ளமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப் படுவார்கள் என்பதோடு, இங்கு அரச சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் முறையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :-

(i) அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு - உயர்ந்த பட்சம் 25 புள்ளிகள்
  - பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - 15 புள்ளிகள்
  - பட்டப்பின் படிப்புப் பட்டம் - 20 புள்ளிகள்
  - கலாநிதிப் பட்டம் - 25 புள்ளிகள்

(ii) சேவை அனுபவம் - உயர்ந்தபட்சம் 30 புள்ளிகள் (10 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்தின் பொருட்டு ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம்)

(iii) பின்வரும் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகளின் பொருட்டு :- உயர்ந்தபட்சம் 20 புள்ளிகள்

(ஒன்றுக்கு 04 புள்ளிகள் வீதம்)

(அ) குறித்த வெளியீடு 2000 சொற்களுக்கு மேற் பட்டதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) குறித்த ஆராய்ச்சி அல்லது வெளியீடு இயற்கை வளத் துறையில் அல்லது ஆட் சேர்ப்பு நடைமுறையின் (6) I பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஒரு துறையிலா யிருத்தல் வேண்டும்.

(இ) தனி ஒருவரால் மேற்கொள் ளப்பட்டுள்ள ஆராய்ச்சி மற் றும் வெளியீட்டுக்கே 04 புள்ளிகள் வழங்கப் படும் என்பதோடு, ஒரு குழு வாக மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சிக்கு அல்லது வெளியீட்டுக்கு 02 புள்ளிகள் மட்டுமே வழங்கப்படும்.

(iv) கணனி அறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறையில் பெற் றுள்ள பயிற்சி - உயர்ந்தபட்சம் 15 புள்ளிகள் (06 மாத காலத்திற்கு மேற் பட்ட பாடநெறியின் பொருட்டு ஒன்றுக்கு 03 புள்ளிகள் வீதம்)

(v) நேர்முகப் பரீட்சைத் திறன்கள் - உயர்ந்தபட்சம் 10 புள்ளிகள்

5. **சேவை நிபந்தனைகள்** : (i) இப்பதவி நிரந்தரமானதாகும் ; விதவை அநாதை/விதுரர் அநாதை ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையிலுள்ள வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாயிருக்கும்.

6. இதனோடுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட சுயவிபரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 2009.07.17 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக, "செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதிப் பணிப்பாளர் (இயற்கை வளங்கள்)" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உங்களால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஆட்சேர்ப்புக்கு முன்னர் வெளிப்படுமிடத்து விண்ணப்பதாரரின் அபேட்சகர் நிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்குப் புறம்பான தகவல்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் வெளிப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு**

பிரதிப் பணிப்பாளர் (இயற்கை வளங்கள்) பதவி

அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம் [ ]

(பகுதி "அ")

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) சிங்களம் அல்லது தமிழ் மொழியில்- திரு./திருமதி/செல்வி :———.
பெயர் (முதலெழுத்துக்களுடன்) ஆங்கில மொழியில் :
(Mr./Miss/Mrs.) :———.
முதலெழுத்துக்கள் குறிக்கின்ற பெயர் (சிங்களம் அல்லது தமிழ் மொழியில்) :———.
(ஆங்கில மொழியில்) :———.

2. முகவரி :
(i) பிரத்தியேக :———.
(ii) அலுவலக :———.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :———.

4. பிறந்த திகதி :-
வருடம் :———, மாதம் :———, திகதி :———.

5. 2009 ——— ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :———, மாதங்கள் :———, நாட்கள் :———.

6. இனம் :———.

7. திருமணமானவரா/திருமணமாகாதவரா :———.

8. (அ) கல்வித் தகைமைகள் :–

(i) பட்டம் தொடர்பான தகைமைகள் :-

| பட்டம் | பாடங்கள் | சித்தியடைதல் சாதாரணம்/ வகுப்பு | ஆண்டு | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) பட்டப்பின் படிப்புத் தகைமைகள் :-

| பட்டப்பின் படிப்பின் பெயர் | பட்டம் வழங்கப் பட்ட ஆண்டு | பல்கலைக் கழகம் |
|---|---|---|
| | | |

9. சேவை அனுபவம் (நிறுவனத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட சேவைச் சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்.) :———.

10. ஏனைய தகைமைகள் :———.

11. இதற்கு முன்னர் அரச திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றியிருப்பின் விலகுவதற்கான காரணம் :———.

12. குற்றவியல் குற்றத்திற்கு நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக் கப்பட்டிருப்பின், குற்றம் மற்றும் தண்டனை தொடர்பான விபரங்கள் :———.

13. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிமொழி கின்றேன். நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் இதில் தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதேனும் உண்மைக்கு மாற்றமான தென அல்லது தவறானதென வெளிப்படுமிடத்து, இப்பதவிக்கு நான் தகுதியற்றவர் என்பதையும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் வெளிப்படுமிடத்து நட்டஈட்டுக் கொடுப்பனவு ஏதுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நானறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

(பிரிவு "ஆ")

***அரச திணைக்கள/மாகாணசபை/நிறுவனத் தலைவரின் விதப்புரை***

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ............... திணைக்களத்தில்/ அமைச்சில்/ மாகாண சபையில் ............... ஆக சேவையாற்றுகிறார் என்பதையும், மேற்படி விபரங்கள் சரியானவை

என்பதையும், இவரது சேவை, வரவு மற்றும் நடத்தை திருப்திகர மாயுள்ளது என்பதையும் சான்றுபடுத்துகிறேன். இவர் மேற்படி பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவாராயின் சேவையிலிருந்து விடுவிக்கப் படுவார்/விடுவிக்கப்பட மாட்டார்.

———,
நிறுவனத் தலைவரின்/அதிகாரம்வாய்ந்த
உத்தியோகத்தரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :———.
பதவி :———.
முகவரி :———.
திகதி :———.

6-222

## திருத்தம்

### பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொன்ஸ்டபிள்/பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள்/ பொலிஸ் கொன்ஸ்டபிள் சாரதி, விசேட அதிரடிப் படையின் பொலிஸ் கொன்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் கொன்ஸ்டபிள் சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக 2008.12.26 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்த 1582 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளல் 2009.06.30 ஆந் திகதிவரையாகும். இது, மேலும் 2009.07.01 ஆந் திகதி முதல் 03 மாதங்கள் வரை அதாவது 2009.09.30 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர்.

6-354

---

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆடி மாதம் 20 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, வைகாசி மாதம் 27 ஆந் திகதி.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. காலி | காலி நான்கு கிறவெற்ஸ் | காலி நகர மஹமோதர அரச வைத்தியசாலைப் பிரிவின் பிறப்பு இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |
| 2. காலி | காலி நான்கு கிறவெற்ஸ் | காலி நகர கிழக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 3. காலி | தவலம | ஹினிதும பத்துவ பிரிவின் விவாக மற்றும் ஹபறகட பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |
| 4. காலி | பெந்தோட்ட | பெந்தற வலல்லாவிட்ட கோறளை பிரிவின் விவாக மற்றும் உறகக பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |
| 5. காலி | அம்பலாந்கொட | வெல்லாபொட பத்துவ பிரிவின் விவாக மற்றும் படபொல பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |
| 6. காலி | நாகொட | கங்கபொத பத்துவ பிரிவின் விவாக மற்றும் நாகொட பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |

6-289

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆவண உதவியாளர் மற்றும் பாடசாலை புள்ளிவிபரவியலாளர் பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009

மேற்கூறப்பட்ட பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளுக்கமைய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2009, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. (i) இப்பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும்.

(ii) பரீட்சார்த்திக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் இவ்வறி வித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை களுக்கும் உட்பட வேண்டியேற்படும்.

(iii) கல்வி அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆவண உதவியாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்கள் மாத்திரமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

3. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டும். இம்மாதிரிப்படிவத்திற்கமைய ஏ4 கடதாசியில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும். தலைப்பு இல. 1-5 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு பொறித்து தயாரிக்க முடியும் என்ற போதிலும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்ப வேண்டும். இதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பரீட்சார்த்தி களினால் தமது வலயக் கல்விப் பணிப்பாளரினால்/திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக 2009.07.10 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கல்வி அமைச்சின் செயலாளர், இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப் படிவங்களும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் திணைக்களப் பொறுப்பாளரின் ஒப்பம் மற்றும் பதவி முத்திரை அற்ற விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக் கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூர்த்திசெய்யப் படும் விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட் டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி கவனம் செலுத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை மேலும் அறியத்தருகிறேன். அத்துடன் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படி வங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும்.

4. முழுமையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூ. 300 ஐயும் ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றும் விண்ணப்பதாரிகள் ரூ. 100 ஐயும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிலக்கம் 4000-20-03-20-13 இற்கு வைப்பிலிடக் கூடியவாறு எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டவேண்டும். மேலும் முதலாவது தடவையில் பரீட்சைக்குத் தோற்றும்போது பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியது அவசியமில்லை. அதற்குப் பின்னர் பரீட்சைக்குத் தோற்றும்போது மேற்கூறப்பட்டவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

அப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

பரீட்சைக்குத் தோற்றும்போது மேற்கூறப்பட்டவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். அப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

5. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணத்தை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்திற்கமைய இரத்துச்செய்ய முடியும்.

6. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் குறிப்பிடப்பட்டுள்ள பிரதியுடன் அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களினால் பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு அவர்களின் அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. அனுமதிப்பத்திரம் தபாலில் இடப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் பிரசுரமாகும் 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காதிருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதியையும் பதிவுத்தபால் செய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் வெளிப்பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும்.

7. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குட்பட வேண்டியேற்படும். இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களப் பொறுப்பாளரினால் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட மாட்டாது.

8. தாம் கல்வி கற்ற மொழி அல்லது அரச கருமமொழி மூலம் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு பதிலளிக்க வேண்டும். தாம் விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடைபெறும்.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்குமுறைகள்**.- மேற்கூறப்பட்ட பதவிகளுக்குரிய பரீட்சை கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்களை உள்ளடக்கியதாக அமையும் :-

1. அலுவலக முறை - (1 மணித்தியாலம்) 100 புள்ளிகள், பல்தேர்வு 50 புள்ளிகள்
2. கணக்கு முறைமை - (1 மணித்தியாலம்) 100 புள்ளிகள். கட்டமைக்கப்பட்ட 5 கேள்விகளில் 4 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.
3. கணனிப் பரீட்சை - (1 மணித்தியாலம்) 100 புள்ளிகள், பல்தேர்வு வினா 50 புள்ளிகள்

11. **பாடவிதானம்** :

1. அலுவலக முறை (1 மணித்தியாலம்) — 100 புள்ளிகள்.- அரச அலுவலகங்களில் நடைமுறையிலுள்ள அலுவலக முறைகள் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் அவ்வறிவை பிரயோக ரீதியில் பயன்படுத்தக்கூடிய இயலுமையும், கடமைப் பொருட்டு ஆவணங்களை தெளிவாக மற்றும் சுருக்கமாக குறிப்பு மூலம் கருத்துக்கள் மேற்பார்வைகளை சமர்ப்பிக்க முடிதல் மற்றும் கட்டளைகளுக்கமைய கடிதமொன்றை ஆவணப்படுத்தும் இயலுமை பரிசீலனைக்குட்படுத்தப் படுகிறது.

2. கணக்கு முறைமை (1 மணித்தியாலம்) — 100 புள்ளிகள்.- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படைக் கணக்கு மற்றும் நிதி நிர்வாக புத்தகங்களின் பணிகள் தொடர்பான விளக்கம் மற்றும் அறிவை மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப் படுகிறது.

சித்திபெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 வீதப் புள்ளிகளைப் பெற வேண்டும்.

3. **கணனி இயலுமை தொடர்பான பிரயோகப் பரீட்சை**— (ஒரு மணித்தியாலம்).- ஏதாவதொரு காரணத்தின் அடிப்படை யில் கணனி வசதிகளை வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் உரிய நிரல் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப் பட்டவாறு தட்டச்சு தொடர்பான பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் மூலம் 06 மாதங்களைவிடக் குறையாத கால எல்லையில் கணனிப் பாடநெறியை தொடர்ந்துள்ள உத்தியோகத்தர்கள் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

(ஏற்கனவே சேவையிலுள்ள மூன்று வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் அப்பரீட்சையில் சித்தியடைந்த தினம் தொடக்கம் 3 வருட காலத்திற்கு சலுகைக்காலம் வழங்கப்படும்.)

விண்ணப்பதாரர்களின் கீழ்க்குறிப்பிடப்பட்ட இயலுமை தொடர்பாக மேற்பார்வை செய்வதே இப்பரீட்சையின் நோக்கமாகும் :-

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை சிந்தனைகள்.
வின்டோஸ் செயற்பாட்டுத் தொகுதி.
ஆவண முகாமைத்துவம்.

| | |
|---|---|
| சொற்றொடர்களை அமைத்தல் - | அடிப்படைத் திறமைகள், கணனித் திரைக்குப் பழகுதல், சொற்களின் வகை, எழுத்து வகை மற்றும் குறியீடுகள், உப பந்தி, பந்தி போன்றவற்றை வரிசைப்படுத்தலின் பரம்பலை மாற்றியமைத்தல் நிரல் ஒழுங்கமைத்தல் (Tab settings), அகராதி, இலக்கணப் பிழைகள், ஒத்த சொற்கள், பக்கக் குறியீடுகளை இடல், பக்கங்களைத் தயாரித்தல், ஆவணங்களை அச்சிடல், வரைபடங்களை தயாரித்தல், தொடராக அமைத்தல், ஆவண முகாமைத்துவம், ஆவண மொன்றை பல முகவர்களுக்கு அனுப்பத் தயாரித்தல், - மெக்ரோ பயன்பாடு |
| பக்க வடிவமைப்பு | அடிப்படைத் தகைமைகள் மாதிரி தயாரிப்பு (Formatting) தயாரிப்பு பக்கங்களின் பரம்பல் மற்றும் உள்ளடக்கம் நீக்குதல் புள்ளிவிபரங்களை ஒழுங்காகத் தயாரித்தல் வரைபுகளை அமைத்தல் அச்சிடல் @ குறியீடுகள் (@ Function) மெக்ரோ பயன்பாடு, ஆவண முகாமைத்துவம் |
| புள்ளிவிபர கோவை | - அடிப்படைத் தகைமை புள்ளிவிபரக் கோவை ஆக்கம் மற்றும் பயன்பாட்டு மாதிரிப் படிவம் இணை மாதிரி, தகவல் பகுதி, தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மக்ரோப் பயன்பாடு |
| இணையத்தளம் | - இணையத்தள அறிமுகம் சர்வதேச இணைய வலையமைப்பு வழிமுறைகளைக் கண்டறியும் முறை செயற்பாட்டு இணையத்தளம் |
| இலத்திரனியல் தபால் (E-Mail) | அறிமுகம், அடிப்படைத் தகைமைகள், மின் அஞ்சல் பெற்றுக்கொள்ளல், மின் அஞ்சல் அனுப்புதல், அதற்குப் பதிலளித்தல், இணைப்பு பயன்பாடு, முகவரி அறிந்து கொள்ள குறுகிய பெயர்களைப் பயன்படுத்துதல், செய்தி பரிமாற்றம் |

12. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பது உரிய பரீட்சார்த்தி பரீட்சைக்காக சகல தகைமைகளையும் பூர்த்திசெய்தவராகக் கருத்திற்கொண்டல்ல.

13. இவ்வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் தோற்றி சித்தியடைய முடிவதுடன் சித்தி அடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40 புள்ளிகள் வீதம் பெறவேண்டும்.

14. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாத ஏதாவதொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

எம். எம். என். டீ. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
''இசுருபாய'',
பத்தரமுல்லை,
2009, மே 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சின் ஆவண உதவியாளர் மற்றும் பாடசாலை புள்ளிவிபரவியலாளர் பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009**

First Efficiency Bar Examination for officers belonging to posts of Document Assistants and School Data Entry Operators recruited under the Ministry of Education – 2009

பரீட்சை இலக்கம் : ☐

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மொழி :
உரிய எழுத்தினைக் கூட்டினுள் குறிப்பிடுக. ☐
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)

1. விண்ணப்பதாரியின் முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர் :———.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உ + ம் : SUNIL, J. M. U.

1.1 முதல் எழுத்துக்களினால் குறிக்கும் பெயர் :———.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :———.

1.2 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :———.

1.3 தேசிய அடையாள அட்டை இல. :–

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. சேவை நிலையமும் முகவரியும் :

2.1 பாடசாலை/கல்விக் கல்லூரி/ஆசிரிய கல்லூரி/அலுவலகத்தின் பெயர் :———.

2.2 அலுவலக முகவரி :———.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3. தற்போது வகிக்கும் பதவி :———.
(நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்கவும்.)

3.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :———.

3.2 நியமனத் திகதி :———.

4. தோற்ற இருக்கும் பாடங்கள் :

| பாடங்கள் | பாட இல. |
|---|---|
| | |
| | |
| | |

5. பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

இலக்கம் :———. திகதி :———.

பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உண்டு எனவும் தெரிவித்துக்கொள்வதோடு இப்பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் விதிமுறைகள் பற்றியும் நான் அறிந்துள்ளேன்.

———,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :———.

**குறிப்பு**.- தமது திணைக்களப் பொறுப்பாளர் அல்லது அத்திணைக் களத்தின் பொறுப்பாளருக்காக கையொப்பமிட அதிகாரம்கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின்/அதிபரின்/கல்விக் கல்லூரியின்/ஆசிரிய கல்லூரியின் மற்றும் நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ள திரு./திருமதி/செல்வி .................................................................. என்பவர் ..................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளதாகவும் பற்றுச்சீட்டை கையொப்பமிட்டுள்ளதாகவும் உறுதிசெய்கிறேன்.

———————————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை (அதிபர்/பீடாதிபதி/
ஆசிரிய கல்லூரியின் அதிபர்/பதவிநிலை
உத்தியோகத்தர்).

பெயர் :———.
பதவிப் பெயர் :———.
முகவரி :———.
திகதி :———.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும்
2. உத்தியோகத்தர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகைமையுடையவர் எனவும்

உறுதிப்படுத்துகிறேன்.

———,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்
(வலயக் கல்விப் பணிப்பாளர் பீடாதிபதி).

பெயர் :———.
பதவிப் பெயர் :———.
முகவரி :———.
திகதி :———.

6-327

---

**இலங்கை புகையிரத திணைக்களம்**

புகையிரத பாதுகாப்பு படையின் உதவி பாதுகாப்பு அத்தியட்சகர் பதவி

இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாப்பு படையின் உதவி பாதுகாப்பு அத்தியட்சகர் பதவியில் நிலவும் ஒரு வெற்றிடத்தினை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவியின் தன்மை**.- தமது அதிகார எல்லைக்குள் இருக்கும் பாதுகாப்பு படை காரியாலயங்களின் நிருவாகம் மற்றும் சேவையாளர் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், ஊழல்கள், அபச்சாரம், மோசடி மற்றும் திணைக்கள எல்லைக்குள் உண்டாகும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தல் மேலும் அவை ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல், புகையிரத பாதுகாப்பு படையின் அதிகாரி உள்ளடங்கலாக உயர் அதிகாரிகளினதும் புகையிரத பொது முகாமையாளரினதும் அறிவுறுத்தல்கள் மற்றும் ஆணைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் மேலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உறுதியளித்தல் மற்றும் பாதுகாப்பு படை அதிகாரியினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.-

(i) அரச/கூட்டுத்தாபன/மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவன தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பிவைக்கப்படும் விண்ணப்படிவத்தில் விண்ணப் பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ii) சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2009.07.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு "புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம்

அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புகையிரத பாதுகாப்புப் படையின் உதவி பாதுகாப்பு அத்தியட்சகர் பதவிக்கான ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பப் படிவம்'' என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பப் பத்திரமானது சகல வழிகளிலும் பூரணமானதாகவும் சரியானதாகவும் இருத்தல் வேண்டும்.

(iii) தாமதித்து கிடைக்கும் விண்ணப்பங்கள் அல்லது வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்புடையதற்ற விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட கடிதங்கள் தபாலின்போது காணாமல் போனதாக செய்யப்படும் முறைப்பாடுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iv) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 20.07.2009 ஆகும்.

4. **வேதன அளவுத்திட்டம்**.- ரூபா 19,465-325X17- ரூபா 24,665 மாதாந்தம் (06/2006 அ.பொ.நி.சு. படி) பதவியில் நியமிக்கப்பட்டு 3 வருடங்கள் முற்றுப்பெறுவதற்கு முன் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயது எல்லை**.- வயது 18-45 வருடத்திற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டியதுடன் சம்பந்தப்பட்ட ஏனைய தகைமைகளை உடைய அரச/மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் இவ்வயது எல்லை 50 வருடங்களுக்கு அதிகமாக இருத்தலாகாது.

6. **கல்வித் தகைமைகள்**.- விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பினை பெற்றிருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) உயரம்.- 5 அடி 6 அங்குலங்களை கொண்டிருத்தல் வேண்டும். (5'6'') (பாதணிகள் இன்றி)

(ii) கண் பார்வை.- மூக்கு கண்ணாடி இன்றி ''ஏ'' 2 கண் மட்ட அளவுள்ளதாக இருத்தல் வேண்டும். (இது எல்பீ 29 கண் பார்வை பரீட்சையில் தோற்றுவதற்கு அமைய)

(iii) மார்பு சுற்றளவு.- 34 அங்குலத்தினை கொண்டதாகவும் சிறந்த தேக ஆரோக்கியத்தை கொண்டவராகவும் ஆளுமை தன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) விளையாட்டுத் துறையிலான திறமைகள் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

(v) தொழில் சார்ந்த தகைமைகளை பெற்றிருத்தலும் மேலதிக தகைமையாக கருதப்படும்.

8. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- விண்ணப்பதாரிகள் போட்டி பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதில் கூடிய தகைமைகளை பெறுபவர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி புள்ளிகள் வழங்கப்பட்டு அப்புள்ளிகளையும் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளையும் கூட்டி வரும் புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளின் வரிசைக்கு ஏற்ப நிலவும் வெற்றிடத்திற்கு மாத்திரம் தேர்வு செய்யப்படுவர்.

**பரீட்சை பாடவிதானம் தொடர்பான விடயங்கள்** :

9. (1) (i) இப்பரீட்சை ஓர் எழுத்துமூலப் பரீட்சையாகும்.

(ii) கேள்வித்தாள்கள் இரண்டாகும்.

(2) (i) புத்தி பரிசீலனை (காலம் : 1 1/4 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள் ஆகும்.

இது விண்ணப்பதாரியின் சிந்தனையின் தர்க்க ரீதியான தன்மையினையும் அவரது மனதின் பகுப்பாய்வு தன்மையினையும் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலையும் முறையாக தீர்மானிப்பதற்காக ஆகும். இவ்வினாப்படிவமானது பல்வினா படிவத்தினை ஒத்ததாக அமைக்கப்பட்டிருக்கும்.

(ii) விளங்கிக்கொள்ளல் மற்றும் பொது அறிவு (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

விளங்கிக்கொள்ளல்.- இவ்வினாப்படிவத்தில் சிறிய சொற்றொடர்கள் பல விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும். சில சொற்றொடர்கள் வழங்கப்படுவது அதன் அர்த்தத்தினை தனி சொற்களில் வெளிப்படுத்துவதற்காகும். கீழ் கோடிடப்பட்ட சொற்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய வினாக்கள் பலவும் தரப்படும். மேலும் சில சொற்றொடர்கள் சம்பந்தமாக விண்ணப்பதாரிகளுக்கு மாற்று வெளிப்பாடுகள் பல முன்வைக்கப்படுவதோடு அதில் ஒன்று இச்சொற்றொடர்களில் உள்ளடங்கியுள்ள கருத்தோடு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படும். விண்ணப்பதாரிகள் இதில் மிகவும் பொருத்தமான கேள்வியினை தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் சில சொற்றொடர்கள் சம்பந்தமாக விண்ணப்பதாரிகளுக்கு ஒருசில கேள்விகள் முன்வைக்கப்படுவதோடு அவற்றுக்கு சரியாக விடையளிக்க வேண்டும். இவ்வினாத்தாள் வழங்கப்படுவதன் நோக்கம் விண்ணப்பதாரி அச்சொற்றொடர்களின் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் முறையினை பரிசீலனை செய்வதன் பொருட்டாகும். இதற்கு மேலதிகமாக சுருக்கம் எழுதுவதன் பொருட்டு ஓரளவு நீண்ட பந்தியொன்றும் வழங்கப்படும்.

பொது அறிவு.- தகவல் தொழில்நுட்பம், விண்ணப்பதாரி வசிக்கும் அல்லது கடமை செய்யும் சூழல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக கலாச்சார, பொருளாதார, சுற்றாடல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமான நவீன விடயங்கள் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி போன்றவை சம்பந்தமாக விண்ணப்பதாரி கொண்டுள்ள அறிவை பரிசோதிக்கும் அமைப்பில் அமைந்த கேள்வித்தாளாகும்.

(3) சித்தியடைவதற்காக ஒரு வினாத்தாளுக்கு குறைந்தது 40 புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

10. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனை** :

(1) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய கொடுப்பனவுக்கு உரித்துள்ளது.

(2) தாபன விதிக்கோவை II ஆம் பிரிவின் 12:1, 12:3 மற்றும் 12:6 தொடக்கம் 12:12 வரையான நிபந்தனைகளுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

(3) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி 3 வருடகால தகுதிநிலைகாண் காலத்திற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(4) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 ஆம் பிரிவின் விதிகள் மற்றும் அரச மொழிக் கொள்கையினை நிறைவேற்றும் முகமாக தற்போது நடைமுறையில் உள்ளதும் இனி வருங்காலங்களில் நடைமுறைப்படவுள்ளதுமான சட்டதிட்டங்கள் மற்றும் அரசியலமைப்புக்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நீர் உறுதியளித்தல் வேண்டும்.

(5) அவ்வாறே தாபன விதிக்கோவை, புகையிரத சரத்துக்கள், புகையிரத திணைக்கள அறிவுறுத்தல்கள், புகையிரத இயக்க நடவடிக்கைகள் சம்பந்தமான பாதுகாப்பு விதிகள், புகையிரத பாதுகாப்புச் சேவை தொடர்பான நிரந்தர ஆணைகள் போன்ற விதிகளுக்கும் தீவிரவாத நடவடிக்கைகளை தடுத்தல் மற்றும் அவ்வாறு நடக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் வராது தடுப்பதற்காகவும் மேலும் ஏனைய பாதுகாப்பு தேவைகளின் பொருட்டும் அரசாங்கத்தினால் அல்லது புகையிரத பொது முகாமையாளரினாலோ அல்லது அவர் சார்பில் புகையிரத பாதுகாப்பு படையின் அதிகாரியினாலோ அல்லது இடையிடையே அமுல்படுத்தப்படும் கட்டளைகளுக்கும் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் அனைத்து உத்தியோகத்தர்களும் குறித்த திணைக்கள பரீட்சைகளில் தேர்ச்சிபெற வேண்டும்.

(7) தேர்வுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கையின் எப்பகுதியிலும் சேவை செய்யக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

(8) தேர்வு செய்யப்படுபவர்கள் வருடாந்தம் நடாத்தப்படும் உள மற்றும் உடல் ஆரோக்கிய பரீட்சைகளிலும் தேர்ச்சியடைய வேண்டும்.

(9) வர்த்தமானி அறிவித்தலில் 1 ஆவது பிரிவில் (11அ) பந்தியில் முதலில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவையின் பதவிகளுக்கு செய்யப்படும் நியமனங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்காக மீளளிக்கப்பட முடியாத கட்டணமாக ரூ. 250 அறவிடப்படும். அதை உமக்கு வசதியான தபால் அலுவலகத்தில் செலுத்தி புகையிரத பொது முகாமையாளர், செலுத்தப்படும் அலுவலகம், மருதானை (01000) எனும் பெயருக்கு காசுக்கட்டளை பெற்று மூலப்பிரதியை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். அதன் மூலப் பிரதியை தவிர்த்து வேறு பிரதியை இணைக்கக் கூடாது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினையிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவி பாதுகாப்பு அதிகாரி (வெளி) பதவிக்கான போட்டி பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம்" என குறிப்பிட்டு 20.07.2009 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் அல்லது சட்டத்தரணி, முப்படைகளின் அதிகாரி அதிகாரமுள்ள உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன்படி ரூ. 19,755 இனை மாதாந்த ஆரம்ப திரட்டிய சம்பளமாக அல்லது அதற்கு அதிகமான ஆரம்ப சம்பள ஏற்றத்திற்கு உரித்துடைய அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பீ. பீ. விஜேசேகர,
புகையிரத பொது முகாமையாளர்.

கோவை இல. நி. 9/692/87 (111),
புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலக உபயோகத்திற்காக

**இலங்கை புகையிரத திணைக்களம்**

*புகையிரத பாதுகாப்பு படையின் உதவி பாதுகாப்பு அத்தியட்சகர் (வெளி) பதவிக்கான போட்டிப் பரீட்சை*

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
   (i) சிங்களத்தில்/தமிழில் :———.
   (ii) ஆங்கிலத்தில் :———.

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :———.
   (i) சிங்களத்தில்/தமிழில் :———.
   (ii) ஆங்கிலத்தில் :———.

3. நிரந்தர முகவரி :———.
   (i) சிங்களத்தில்/தமிழில் :———.
   (ii) ஆங்கிலத்தில் :———.

4. பால் : (சரியான கூட்டினுள் " ✓ " இடுக) :———.

   பெண் : [ ] ஆண் : [ ]

5. வதிவிடம் :

   (i) கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும் :———.
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :———.
   (iii) மாவட்டம் :———.

6. இனத்தொகுதி (சரியான கூட்டினுள் " ✓ " இடுக) :

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | [ ] | இந்தியத் தமிழர் | [ ] |
| இலங்கைத் தமிழ் | [ ] | பறங்கியர் | [ ] |
| முஸ்லிம் | [ ] | மலாயர் | [ ] |
| வேறு | [ ] | | |

7. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (பொருத்தமான கூட்டினுள் " ✓ " இடுக.)

   சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

8. பிரஜா உரிமை : (பொருத்தமான கூட்டினுள் "✓"இடுக) :———.

   பரம்பரை மூலம் [ ] பதிவுசெய்தல் மூலம் [ ]

9. (i) பிறந்த திகதி :
ஆண்டு :———. மாதம் :———. திகதி :———.
(ii) 2009.07.20 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

10. (i) உயரம் : அடி ......... அங்குலம் .........
(ii) மார்பு சுற்றளவு :

11. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :

12. கல்வித் தகைமைகள் :-

(i) க. பொ. த. (சாதாரண தரம்) :
முதல் தடவை :———.
சுட்டெண் :———.
வருடம் :———.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | ........................................ | ...................... |
| (ii) | ........................................ | ...................... |
| (iii) | ........................................ | ...................... |
| (iv) | ........................................ | ...................... |
| (v) | ........................................ | ...................... |
| (vi) | ........................................ | ...................... |
| (vii) | ........................................ | ...................... |
| (viii) | ........................................ | ...................... |
| (ix) | ........................................ | ...................... |

இரண்டாம் தடவை :———.
சுட்டெண் :———.
வருடம் :———.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | ........................................ | ...................... |
| (ii) | ........................................ | ...................... |
| (iii) | ........................................ | ...................... |
| (iv) | ........................................ | ...................... |
| (v) | ........................................ | ...................... |
| (vi) | ........................................ | ...................... |
| (vii) | ........................................ | ...................... |
| (viii) | ........................................ | ...................... |
| (ix) | ........................................ | ...................... |

(ii) க. பொ. த. (உயர் தரம்)
சுட்டெண் :———.
வருடம் :———.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | ........................................ | ...................... |
| (ii) | ........................................ | ...................... |
| (iii) | ........................................ | ...................... |
| (iv) | ........................................ | ...................... |

பெற்ற பட்டம் :———.
வருடம் :———.
பல்கலைக்கழகம் :———.

13. வேறு கல்வித் தகைமைகள் :———.

14. விளையாட்டு தகைமைகள் :———.

15. வேறு தகைமைகள் :———.

16. நீர் ஏதாவது குற்றச்செயல் காரணமாக குற்றவாளியாக நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுள்ளீரா ? ஆம் என்றால் விபரம் தரவும் :———.

ஆம் ☐ இல்லை ☐

**17. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்ட தகவல்கள் யாவும் நான் அறிந்தவரை உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். இதில் ஏதேனும் பகுதி பூரணப்படுத்தப்படாமையினால் அல்லது பிழையான முறையிலோ, பொய்யான தகவல்களையோ குறிப்பிடப்பட்டிருத்தல் எனது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும் என்பதையும் நான் அறிவேன். இதனால் ஏற்படும் நஷ்டத்தையும் தனிப்பட்ட முறையில் நான் பொறுப்பேற்றுக்கொள்வேன்.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் பொய்யானதென நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பிறகு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன். இதனால் ஏற்படும் நஷ்டத்தையும் தனிப்பட்ட முறையில் நான் பொறுப்பேற்றுக் கொள்வேன்.

(இ) ............................................. தபால் அலுவலகத்தில் 250 ரூபாவை செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ................................. ஐ உடைய காசுக் கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்நிபந்தனைகளுக்கு கீழ்படிகின்றேன்.

———.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

**18. சேவை வழங்குனரின் கூற்று :**

இவ்வலுவலகத்தில் சேவை புரியும் ...................................... அவர்களின் விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தி இத்துடன்

இணைத்து அனுப்புகிறேன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் பதிவாகவில்லை. அவருடைய வேலை/ நடத்தை/ வரவு திருப்திகரமானது. இவர் இப்பரீட்சையில் சித்தியடைந்து குறித்த பதவிக்காக தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுப்பு செய்ய முடியும்/முடியாது என தெரிவித்துக்கொள்கின்றேன்.

திணைக்கள பிரதானியின் கையொப்பம் :———.

பதவி :———.

இறப்பர் இலச்சினை :———.

19. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் திரு. ................... .......................... என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

———,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :———.

பதவி :———.

முகவரி :———.

திகதி :———.

(தயவுசெய்து இறப்பர் முத்திரையை பொறிக்கவும்.)

6-368